Publication: Tamil Murasu, p 2
Date: 24 July 2014
Headline: Failure is my first step to success: Dinesh



சிங்கப்பூர் நிர்வாகப் பல்கலைக்கழகத்தின் கணக்கியல் பாடத்தில் சிறப்புத் தேர்ச்சி பெற்ற 26 வயது உருத்திரமூர்த்தி தினேஷ். **படம்: திமத்தி டேவிட்**

# தோல்வியே எனது வெற்றியின் முதற்படி: தினேஷ்

திமத்தி டேவிட்

தெமாசெக் பலதுறைத் தொழிற் கல்லூரியில் வர்த்தகத் துறையில் கணிதப் பாடத்தில் சிறப்பாகச் செய்யாத தினேஷ் உருத்திர மூர்த்தி, 26, சிங்கப்பூர் நிர்வாகப் பல்கலைக்கழகத்தில் அண்மை யில் நடந்த பட்டமளிப்பு விழாவில் கணக்கில் துறையில், 3.87 மொத்த மதிப்பெண் குறியீடு பெற்று சிறந்த தேர்ச்சி அடைந்தார்.

உள்ளூர் நிறுவனங்களான சிட் டிபேங்க், டிலோய்ட் & டச், ஸ்டேட் ஸ்த்ரீட் வங்கியின் அறக்கட்டளை நிறுவனம் மற்றும் ஹாங்காங்கின் கிரெடிட் சூசி போன்ற நிறுவ னங்களில் வேலைப் பயிற்சி பெற்றதோடு விலைமதிப்பற்ற தொழில்துறை அனுபவமும் பெற்றார் தினேஷ். கணக்கியல் துறையை வேறொரு கோணத்தில் அணுகிய தினேஷ், பல்வேறு வகையான கணக்கியல் வகை களை ஆராய்ந்ததோடு சுய உணர் தலுக்கு இடங்கொடுத்து அவரின் திறன்களை அடையாளம் காணும் வண்ணம் இந்தக் கல்விப் பய ணத்தை ஒரு நம்பிக்கையின் பிரதிபலிப்பாகக் காண்கிறார்.

பெருகி வரும் வாய்ப்புகளுக்கு நடுவே எவற்றுக்கு முன்னுரிமை அளிப்பது என்பதே தமக்கு சவாலாக விளங்குவதாகக் குறிப்பிட்டார் தினேஷ். மேலும், வகுப்பறைக்கு வெளியே பானத் துறையின் கணக்குகளைச் சரி பார்ப்பதிலும், சரக்கு மற்றும் பொருள் பதிவேடு நிர்வாகம், திட்டமிடுதல், நிதி நிர்வாகம் போன்றவற்றில் தமது செயல் திறனை வெளிப்படுத்தினார். மாணவத் தலைமை பொறுப்பையும் ஏற்ற தினேஷ், பள்ளி பொது வர வேற்பு நிகழ்ச்சிகளில் பொது மக்களுக்குப் பள்ளியைப் பற்றி எடுத்துக் கூறுவதோடு, மாணவர் தூதுவராய் வெளிநாட்டு விருந்தி னர்களையும் உபசரித்தார்.

எதிர்காலத் திட்டங்கள் குறித்து வினவியபோது, தாம் தற்போது செய்துகொண்டிருக்கும் துறையிலிருந்து வெகுதூரம் விலக விரும்பவில்லை என்றும் தமக்கு பிடித்ததைச் செய்வதும், வரும் வாய்ப்புகளை நழுவ விடாமல் காப்பதும் சமநிலையைக் காண்பதுமே தமது நோக்கம் என்றும் கூறினார் தினேஷ்.